**STC.NO:970/2022/ P.W2 அகோரமூர்த்தி Cross (சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை) Date : 28.01.2025**

(சாட்சி கடந்த 19.08.2024 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு கால அவகாசம் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி இன்று 28.01.2025 ஆஜர் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் ஏ.சி டெக்னிசியன் முடித்துள்ளேன். நான் எனது அண்ணனுடன் மருத்துவ உபகரணங்கள் விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன். மதுரை மற்றும் விருதுநகரில் விற்பனை செய்து வருகிறேன். விருதுநகரில் உள்ள மருத்துவர்கள் அனைவரையும் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எதிரியின் வீடு உள்ள தெருவில் எனது வீடு உள்ளது என்றால்சரிதான். அந்த தெருவில் பல வருடங்களாக சாக்கடை கழிவு நீர் தேங்கியுள்ளது என்றால்சரிதான். அது சம்மந்தமாக எதிரி மற்றும் அவரது மாமனார் வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியாது. நான் தற்போது குடும்பத்துடன் மதுரை மேலமடையில் வசித்து வருகிறேன். 21.07.2022 ம் தேதி நடந்த சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எனக்கு தெரியாது போன் மூலமாக தெரிந்துகொண்டேன். பார்த்திபன் மற்றும் சுந்தராஜ் எனக்கு போன் செய்தார்கள். முதலில் சுந்தராஜீம் அதன்பின்னர் பார்த்திபனும் போன் செய்தார்கள்.

2. எவ்வளவு நேர இடைவெளி என தெரியவில்லை. சுந்தர்ராஜ் போன் செய்து எனது அப்பாவை எதிரி அடித்துவிட்டதாக சொன்னார். நான் மேற்படி சம்பவம் பற்றி வீடியோ பதிவை பார்த்தேன். வீடியோ பதிவு சுந்தர்ராஜிடம் உள்ளது. எனக்கு மாலை 7 மணிக்கு தகவல் வந்தது. இரவு 10.00 மணியளவில் காயம்பட்ட எனது அப்பாவை பார்க்க விருதுநகர் அரசுமருத்துவமனைக்கு சென்றேன். நானும் எனது தாயாரும் சென்றோம்.

நான் மருத்துவமனையில் சென்று பார்த்தபோது எனது தகப்பனார் அமைதியாக படுத்திருந்தார். நான் என் அப்பாவிடம் பேசினேன். சாதாரணமாக பேசினார். எப்போதும் கொஞ்சம் சத்தமாக பேசினார். என்னுடன் பிறந்த அண்ணன் என்னுடன் வரவில்லை. சம்பவதன்று எனது தாயார் ஆர்.ஆர் நகரில் இருந்தார். மாலை சுமார் 4.30 மணியளவில் எனது தாயாரை அழைத்து சென்றேன். நான் வரும் வழியில் எனது தாயாரை கூட்டிச்சென்றேன்.

3. எனது அப்பா மருத்துவமனையில் 5, 6 நாட்கள் இருந்தார். எனது அம்மா மற்றும் சித்தி எனது அப்பாவை பார்த்துக்கொண்டனர். எனது தாயார் ஆர்.ஆர் நகரில் 100 நாள் வேலைக்கு செல்வார் என்றால்சரிதான். நான் மதுரையிலிருந்து எனது காரில் எனது அப்பாவை பார்க்கவந்தேன். நான் மருத்துவமனை வந்தபோது போலீஸார் அங்கிருந்தனர். எந்த போலீஸார் இருந்தார் என்று எனக்கு தெரியவில்லை. அப்போது என்னை போலீஸார் விசாரிக்கவில்லை. புகார் நான் தான் எழுதிக்கொடுத்தேன். போலீஸார் இரவு 10.30 மணிக்குமேல் வந்தபோது புகார் மனு எழுதி கொடுத்தேன். அப்பா சொன்னதன் அடிப்படையில் புகார் மனு எழுதினேன். 22.07.2022ம் தேதி காவல்நிலையம் சென்று நான் கையொப்பம் செய்யவில்லை. புகார் மனு எனது தகப்பனார் கொடுத்தார். நான் புகார் மனு எழுதிக்கொடுத்தேன். மருத்துவமனையில் வைத்து புகார் மனுவில் எனது தகப்பனார் கையொப்பம் செய்தார். புகார் மனுவில் கையொப்பம் செய்யும்போது எனது தகப்பனார் மயக்க நிலையில் இல்லை, சாதாரணமாக இருந்தார். சுந்தர்ராஜ் கடையில் உள்ள கேமரா பதிவு மூலமாக சம்பவத்தை நான் பார்த்து தெரிந்துகொண்டேன். சம்பவம் பற்றி சுந்தரராஜிற்கு தெரியும். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறாமல் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.